**சிந்தனைத் துளிகள் (2015)**
**எங் டாவின் கைவண்ணம்**

ஆசிய நாகரிக அரும்பொருளகத்தின் வெள்ளைப் பீங்கான் திரட்டு, இந்தப் புதிய காட்சிக் கூடத்தின் திறந்த, வரவேற்கும் தன்மை ஆகியவற்றால் ஊக்கம் பெற்ற ஓவியர் எங் டாவ், ஆசியாவில் வழக்கமாகக் காணப்படும் ஒரு எளிய நெல் தானியத்தின் உருவத்தால் ஈர்க்கப்பட்டார். அதன் வடிவத்தின் எளிமை, அரிசியுடனான பல கலாசார தொடர்புகள் ஆகியவற்றைக் கண்டு வியந்தார்.

இந்த சிற்பங்கள் நடுப்பகுதியிலிருந்து தொடங்கி, அடுக்கு அடுக்காக பொருள் சேர்க்கப்பட்டு நிறைவாக செழிப்பான சாயம் பூசப்பட்டு செதுக்கப்பட்டிருக்கிறது. சிற்பங்கள், நெல் தானியத்தில் உள்ள முளைசூழ் தசை, தளிர், தவிடு, உமி ஆகியவற்றைப் பிரதிபலிக்கிறது.

உலகில் பாதி அரிசியால்தான் உயிர்வாழ்கிறது. 90 விழுக்காடு அரிசி ஆசியாவிலேயே விளைந்து ஆசியாவிலேயே உட்கொள்ளப்படுகிறது. புவியியல், பொருளியல், அரசியல், ஒட்டுமொத்த கண்டத்தின் கலாசாரம் ஆகியவற்றை அரிசி வேளாண்மை ஆழமாகப் பாதித்திருக்கிறது.

சிங்கப்பூரில் பிறந்த எங் டாவ், லண்டனின் அரச கலைக் கல்லூரியில் பயின்றார். துணி, தாள் ஆகியவற்றைக் கொண்டு உருவாக்கப்படும் அவரது படைப்புகள் பெரும் புகழ் பெற்றன. வெளியுறவு அமைச்சு, கோவன் எம்ஆர்டி நிலையம், செயிண்ட் ரெஜிஸ் சிங்கப்பூர் ஆகியவற்றுக்கும் எங் டாவ் படைப்புகளை உருவாக்கியுள்ளார்.

**ஆசிய நாகரிக அரும்பொருளகத்தில் தற்காலக் கலை**

இந்த குவெக் ஹோங் பங் காட்சிக்கூடப் பகுதியில், ஆசிய நாகரிக அரும்பொருளகத்தின் திரட்டுகளைப் பற்றிய சிறப்புத் திட்டங்கள் இடம்பெறும். வெண்வெள்ளியும் கண்ணாடியும் இந்த வரலாற்று கட்டடத்தின் கோடுகளைக் குறிப்பதுபோல தற்காலக் கலைஞர்கள் கடந்த காலக் கலைகளைப் பற்றி புதிய உள்நோக்கை வழங்கமுடியும்.